# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை- மார்ச் 2019

தரம் 13 (2019) பொருளியல்- **21-T-1** இரண்டு மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள்**
- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **சரியான அல்லது பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. (விடையளிப்பதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்.)**


## பகுதி 1

1. பொருளியலில் அமையச் செலவு எனும் எண்ணக்கருவின் தோற்றப்பாட்டுக்கான காரணங்கள்.
   1. வளங்களின் அருமையும் வரையறுக்கப்படாத விருப்பங்களும்.
   2. வளங்களின் அருமையும் தெரிவும்.
   3. எல்லையற்ற மனித விருப்பங்களும், தெரிவும்.
   4. வரையறுக்கப்பட்ட தேவைகளும் வரையறுக்கப்பட்ட வளங்களும்.
   5. வளங்களின் மாற்றுபயோகமும், எல்லயற்ற விருப்பங்களும்.

2. பின்வருவனவற்றுள் எதனை பொருளியலில் முதலீடாகக் கருத முடியாது.
   1. உள்நாட்டு பயன்பாட்டிற்கு விமான நிலையம் அமைத்தல்.
   2. புதிய புகையிரதப்பாதை அமைத்தல்.
   3. பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடநூல் விநியோகம்.
   4. பாடசாலைகளில் அமைக்கப்படும் கட்டட நிர்மாணங்களுக்கான கொடுப்பனவு.
   5. வீடற்றவர்களுக்கான வீடுகளின் நிர்மாணம் மீதான செலவுகள்.

3. ஒரு கட்டளைப் பொருளாதாரத்தில் எதனை உற்பத்தி செய்வது எனும் பிரச்சனை தீர்க்கப்படுவது.
   1. முயற்சியாளர்களின் சுதந்திரமான தீர்மானத்தால்.
   2. அரசாங்கம், மற்றும் நுகர்வோரது ஒன்றுசேர்ந்த தீர்மானங்களால்.
   3. அரசாங்கம், மற்றும் சந்தை சக்திகளின் தீர்மானத்தால்.
   4. அரசாங்கத்தினால் மட்டும்.
   5. நுகர்வோரால் மட்டும்.

4. பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி சாத்திய எல்லையை வரைபடம் காட்டுகிறது. படத்தில் காட்டப்பட்ட நிகழ்வினால் குறிப்பிடப்படுவது.





   1. உடையிலிருந்து உணவிற்கு வள ஒதுக்கீடு இடம் பெறுகின்றது.
   2. உணவிலிருந்து உடைக்கு வள ஒதுக்கீடு இடம் பெறுகின்றது.
   3. உடை உற்பத்தியில் வேலையின்மை அதிகரிக்கின்றது.
   4. உடை உற்பத்தியில் வேலையின்மை குறைவடைகின்றது.
   5. உணவு உற்பத்தியில் வேலையின்மை அதிகரிக்கின்றது.

5. மாற்றுக் காரணிச் சேர்க்கைகளிடையே பொருத்தமான காரணிச் சேர்க்கையை தெரிவு செய்ய வேண்டியுள்ளது. என்பதைச் சரியாகக் குறிப்பிடப்படுவது,
   1. எதனை எந்தளவில் உற்பத்தி செய்வது.
   2. வளங்கள் வினைத்திறனாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றதா என்பதாகும்.
   3. தொழில்நுட்பத் தெரிவுப் பிரச்சினை.
   4. வருமானப் பங்கீடு சார்ந்த பிரச்சினை.
   5. யாருக்காக உற்பத்தி செய்வது.

6. பண்டமொன்றின் கேள்விச் சமன்பாடு Qd = 800 –10p என்பதிலிருந்து Qd= 600 – 10p என்பதாக மாற்றமடைவதற்கு காரணமாக அமையக்கூடிய விடயம் எது?
   1. குறித்த பண்டத்தின விலை வீழ்ச்சியடைதல்.
   2. வருமான விளைவில் ஏற்பட்ட அதிகரிப்பு.
   3. பதிலீட்டு விளைவில் ஏற்பட்ட அதிகரிப்பு.
   4. பதிலீட்டு பண்டத்தின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு.
   5. நிரப்புப் பண்டத்தின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு.

7. கிபன் பண்டமொன்றின் கேள்வி வளையியின் இடதுபுற நகர்வுக்கு காரணமாக அமைவது,
   1. பண்டத்தின் விலை குறைவடைதல்.
   2. இணைப்புப் பண்டத்தின் விலை குறைவடைதல்.
   3. பதிலீட்டுப் பண்டத்தின் விலை குறைவடைதல்.
   4. பண்டத்தின் விலை அதிகரிக்குமென்ற எதிர்கால எதிர்பார்க்கை
   5. வருமான அதிகரிப்பு.

8. பின்வரும் வரைபு உமக்குத் தரப்படுகின்றது. சரியான சேர்க்கையைத் தெரிக.




| | நுகர்வோன் செலுத்த விரும்பும் தொகை | நுகர்வோன் செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. | 10500 | 6000 |
| 2. | 6000 | 10500 |
| 3. | 6000 | 6000 |
| 4. | 6000 | 3750 |
| 5. | 10500 | 3750 |

9. பின்வரும் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் உமக்குத் தரப்படுகின்றது.
   Qd = 400 – 7p Qs = -100 + 3p இச் சமன்பாட்டில் மிகைக்கேள்வி பூச்சியமாகவுள்ள போது உள்ள விலையும் நுகர்வோன் செலவும்,

| | மிகைக் கேள்வி பூச்சியமாக உள்ளபோது விலை | நுகர்வோன் செலவு |
|---|---|---|
| 1. | 30 | 1500 |
| 2. | 30 | 2000 |
| 3. | 50 | 2400 |
| 4. | 50 | 2500 |
| 5 | 65 | 3500 |

10. அலகு விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின்போது,

| | எல்லை வருமானம் | மொத்த வருமானம் |
|---|---|---|
| 1. | பூச்சியம் | இழிவு |
| 2. | பூச்சியம். | உச்சம். |
| 3. | நேர்க்கணியம். | குறைவு |
| 4. | நேர்க்கணியம். | இழிவு. |
| 5. | எதிர்க்கணியம். | குறைவு |


11. பின்வரும் சந்தர்ப்பங்களில் கேள்வி அதிகரிக்கும் போது எப்போது சமநிலை விலை வீழ்ச்சியடையும்.
    1. கேள்வி அதிகரிக்க நிரம்பல் வீழ்ச்சியடைதல்.
    2. கேள்வி அதிகரிக்க நிரம்பல் மாற்றமின்றி இருத்தல்.
    3. கேள்வி அதிகரிக்கும் அளவைவிட நிரம்பல் அதிகரிக்கும் அளவு குறைவாக இருத்தல்.
    4. கேள்வி அதிகரிக்கும் அளவைவிட நிரம்பல் அதிகரிக்கும் அளவு கூடுதலாக இருத்தல்.
    5. கேள்வியும் நிரம்பலும் சமமான அளவால் அதிகரித்தல்.

12. போட்டிச் சந்தையொன்றில் உற்பத்தியாளர் மீது அரசு அலகு வரியினை விதிக்கும்போது வரியின் பின் நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை, என்பவற்றில் ஏற்படும் மாற்றம்,

| | நுகர்வோன் மிகை | உற்பத்தியாளன் மிகை |
|---|---|---|
| 1 | அதிகரிக்கும் | அதிகரிக்கும். |
| 2 | அதிகரிக்கும் | குறையும். |
| 3 | மாறாது | குறையும். |
| 4 | குறையும் | அதிகரிக்கும். |
| 5 | குறையும் | குறையும். |

13. பண்டம் ஒன்றன் விலை அதிகரித்த போதும் அப்பண்டம் மீது நுகர்வோர் மேற்கொண்ட செலவினம் குறைவடைந்து காணப்பட்டது. பின்வரும் சந்தர்ப்பங்களில் இதற்கு பொருத்தமானதாக அமைவது பண்டத்தின் விலை சார் கேள்வி நெகிழ்ச்சியானது,
    1. ஒன்றுக்கு கூடியது.
    2. ஒன்றுக்கு குறைந்தது.
    3. ஒன்றுக்கு சமமானது
    4. முடிவிலி
    5. மேற்கூறிய எவையுமல்ல.

14. போட்டிச் சந்தையொன்றில் சந்தை நிரம்பல் கோடு கீழ்வருமாறு அமைந்தது.




    1. எல்லா நிரம்பல் தொகைகளிலும் விலை சார் நிரம்பல் நெகிழ்ச்சி மாறாதிருக்கும்.
    2. எல்லா நிரம்பல் தொகைகளிலும் விலை சார் நிரம்பல் நெகிழ்வுடையதாயிருக்கும்.
    3. நிரம்பல் தொகை அதிகரிக்க விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி குறையும்.
    4. நிரம்பல் தொகை அதிகரிக்க விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி அதிகரிக்கும் ஆனால் நெகிழ்வற்றதாக அமையும்
    5. நிரம்பல் தொகை அதிகரிக்க விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி அதிகரித்து நெகிழ்ச்சியுடைதாக மாறும்.

15. போட்டிச் சந்தையிலுள்ள A,B,C,D,E ஆகிய நிறுவனங்களின் உற்பத்திகளுக்கான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிக்கான பெறுமானங்கள் வருமாறு.

| நிறுவனங்கள் | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி | +2 | +2.5 | +0.4 | +1.0 | +0.6 |

மேலுள்ள தரவின் அடிப்படையில் சந்தை ஆதிக்கம் குறைந்த நிறுவனமாக எதனைக் கொள்ளலாம்.

1. A  2. B  3. C  4. D  5. E

16. குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டில் மொத்த வெளியீடு அதிகரிக்கும் வேகம் குறைவாக உள்ள போது காணப்படக்கூடியது.
   1. எல்லை உற்பத்தி அதிகரித்துச் செல்லும்.
   2. எல்லைச் செலவு அதிகரித்துச் செல்லும்.
   3. சராசரி உற்பத்தி எதிர்க் கணியமாதல்.
   4. எல்லை உற்பத்தி எதிர்க் கணியமாதல்.
   5. எல்லை உற்பத்தி பூச்சியாதல்.

17. வெளியீடு மற்றும் செலவு தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வெளியீடு (அலகுகளில்) | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவு | 200 | 360 | 380 | 390 | 410 | 450 |

4 அலகு வெளியீட்டுக்கான சராசரி நிலையான செலவு, சராசரி மாறும் செலவு முறையே.

1. 50 52.5  2. 50 62.5  3. 40 52.5  4. 40 62.5  5. 52.5 40

18. குறுங்காலத்தில் சராசரி நிலையான செலவு குறைவடைந்து செல்வதால்,
   1. சராசரி நிலையான செலவுக்கும் சராசரி மாறும் செலவுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்லும்.
   2. சராசரி மாறும் செலவுக்கும், எல்லைச் செலவுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்லும்.
   3. சராசரிச் செலவுக்கும் சராசரி மாறும் செலவுக்குமிடையிலான இடைவெளி படிப்படியாக குறைவடைந்து செல்லும்.
   4. சராசரி நிலையான செலவுக்கும், சராசரி செலவுக்கும் இடையிலான இடைவெளி படிப்படியாக குறைவடைந்து செல்லும்.
   5. சராசரி நிலையான செலவுக்கும், எல்லைச் செலவுக்கும் இடையிலான இடைவெளி படிப்படியாக குறைவடைந்து செல்லும்.

19. பின்வருவனவற்றுள் எச் சந்தையமைப்பில் நிறுவனங்கள் ஒன்றிலொன்று தங்கியிருக்கும்,
   1. நிறைபோட்டி.  2. தனியுரிமை  3. சிலருரிமை
   4. தனியுரிமைப்போட்டி  5. இயற்கைத் தனியுரிமை.

20. நிறுவனமொன்றினது ஆகக்குறைந்த விற்பனை விலை எவ்வாறு இருக்கும்.
   1. எல்லைச் செலவுக் கோட்டின் அதிதாழ்ந்த புள்ளியிலுள்ள மட்டம்.
   2. சராசரி மாறும் செலவுக் கோட்டை எல்லைச் செலவுக்கோடு வெட்டும் புள்ளி மட்டம்.
   3. சராசரி மொத்தச் செலவுக் கோட்டை எல்லைச் செலவுக்கோடு வெட்டும் புள்ளி மட்டம்.
   4. சராசரி மொத்தச் செலவுக் கோட்டின் அதி தாழ்ந்த புள்ளியில் உள்ள செலவு மட்டம்.
   5. எல்லைச் செலவுக் கோடானது எல்லை வருமானக் கோட்டை வெட்டும் புள்ளியிலுள்ள செலவு மட்டம்.

21. தேசிய கணக்கீட்டில் இரட்டை எண்ணல் தவறு ஏற்பட காரணமாக அமைவது,
   1. கூட்டிய பெறுமதிகள் கருத்தில் எடுக்கப்படின்.
   2. மொத்த உற்பத்திப் பெறுமதிகள் கருத்தில் எடுக்கப்படின்.
   3. வரிகள் உள்ளடக்கப்படல்.
   4. இறுதிப் பொருள் பெறுமதி கருத்தில் எடுக்கப்படின்.
   5. காரணிச் செலவுகள் கருத்தில் எடுக்கப்படின்.

22. பின்வருவனவற்றுள் உற்பத்தி எல்லையுள் அடங்காத விடயம் எது?
  1. சந்தையில் விற்பனையாகும் அனைத்துப் பொருட்களும் சேவைகளும்.
  2. உற்பத்தி செய்தவற்றுள் உற்பத்தியாளன் தனக்காக வைத்திருக்கும் பகுதி.
  3. சம்பளம் பெறும் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்படும் குடும்ப வேலைகளும் தனிப்பட்ட வேலைகளும்.
  4. பணப்பத்திரங்களுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்.
  5. துணி தைத்தல், தொப்பி செய்தல் போன்ற வீட்டுப் பொருட்களின் உற்பத்தி நடவடிக்கை.

23. மொத்த தேசிய வருமானம் தரப்படுமிடத்து மொத்த உள்நாட்டுச் செலவினைக் கணிப்பதற்கு எத்தகைய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்,

| | ஏற்றுமதி | இறக்குமதி | தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம். |
|---|---|---|---|
| 1 | கூட்டுதல் | கூட்டுதல் | கூட்டுதல் |
| 2 | கழித்தல். | கழித்தல். | கழித்தல். |
| 3 | கூட்டுதல். | கழித்தல். | கழித்தல். |
| 4 | கழித்தல். | கூட்டுதல் | கழித்தல் |
| 5 | கூட்டுதல். | கழித்தல். | கூட்டுதல் |

24. பொருளாதாரமொன்றின் வளப்பயன்பாடு தொடர்பில் தவறான கூற்றாக அமைவது,
  1. மொத்த வளக் கிடைப்பனவுக்குச் சமனாகும்.
  2. மொத்த உள்நாட்டு உற்பத்தி இறக்குமதி என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.
  3. மொத்த நுகர்வு, மொத்த முதலீடு, ஏற்றுமதிகள் என்பவற்றின் கூட்டுத் தொகையாகும்.
  4. மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து மொத்த நுகர்வைக் கழிக்க வருவதாகும்.
  5. மேற்கூறிய எல்லாம் சரியானதாகும்.

25. பொருளாதாரமொன்றின் முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி 4 ஆகும். அரச செலவு 100ஆல் அதிகரித்தபோது நுகர்வுச் செலவு எவ்வளவால் அதிகரிக்கும்.
  1. 300  2. 400  3. 100.  4. 200  5. 500

26. பொருளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றது.
சேமிப்பு 300வரி 100 அரச செலவு 200 ஏற்றுமதி 150 இறக்குமதி 150 எனத் தரப்படின் முதலீட்டின் பெறுமதி யாது?
  1. 200  2. 150  3. 300  4. 350  5. 400

27. ஒரு எளிய பொருளாதாரத்தின் நுகர்வுச் சமன்பாடு $C = 600 + 0.8y$ ஆகும். இப் பொருளாதாரத்தின் சமனிலைத் தேசிய வருமானம். 5000 ஆகும். இந்நிலையில் இப் பொருளாதாரத்தின் முதலீட்டின் பெறுமதி யாது?
  1. 200  2. 300  3. 400  4. 500  5. 600

28. பணமானது கடன்களைப் பெறவும், அவற்றை மீளச் செலுத்தவும் வசதியளிக்கின்றது. பணத்தின் இப்பணியானது.
  1. பெறுமானத்திரட்டாக தொழிற்படல் எனப்படுகிறது.
  2. பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமமாகத் தொழிற்படல் எனப்படுகிறது.
  3. கணக்கீட்டு அலகாக தொழிற்படல் எனப்படுகிறது.
  4. பெறுமதிகளின் நியமமாக தொழிற்படல் எனப்படுகிறது.
  5. பரிமாற்றூடகமாக தொழிற்படல் எனப்படுகிறது.

29. பொருளாதாரமொன்றில் பண வீக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் நிரம்பல் பக்க காரணியாக எதனைக் கொள்வீர்.
  1. பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு.
  2. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் அதிகரித்தல்.
  3. உள்நாட்டுக் காரணிகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரித்தல்.
  4. அரசாங்க கொள்வனவுகள் அதிகரித்தல்.
  5. தேறிய ஏற்றுமதிகளில் ஏற்படும் அதிகரிப்பு.

30. பணத்தின் பெறுமானம் என்பதனால் கருதப்படுவது யாது?
   1. ஒரு குறிக்கப்பட்ட தொகைப் பணத்தினால் கொள்வனவு செய்யப்படக்கூடிய பொருட்களினதும் சேவைகளினதும் அளவு.
   2. பணவடிவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள செல்வத்தின் அளவு.
   3. மத்திய வங்கியினால் ஒதுக்குகளாக வைக்கப்பட்டுள்ள தங்கத்தின் அளவு.
   4. குத்தி, மற்றும் தாள் நாணயங்களின் உற்பத்திச் செலவு.
   5. பணவடிவில் செல்வத்தை வைத்திருப்பதற்கான சந்தர்ப்பச் செலவு.

31. பொருளாதாரமொன்றின் பெயரளவு மொத்தத் தேசிய உற்பத்தி 6000 பில்லியன் ரூபாவாகவும் பணநிரம்பல் 2000 பில்லியன் ரூபாவாகவும் இருந்தால் பணத்தின் சுழற்சி வேகம் யாது?

   1. 2    2. 3    3. 4    4. 5    5. 6

32. ஆரம்ப வைப்பு ரூபா 20000 ஆகவும் நியதி ஒதுக்குத் தேவை 25% ஆகவும் இருக்கமாயின் வங்கித்துறை நடவடிக்கையினால் பணநிரம்பலில் எற்படும் உயர்ந்தபட்ச அதிகரிப்பின் அளவு யாது?

   1. 20000    2. 25000    3. 60000    4. 65000    5. 100000

33. இலங்கை மத்திய வங்கியின் பிரதான குறிக்கோளாவது.
   A. நாணய மாற்றுவீத உறுதிப்பாடு.
   B. பொருளாதார மற்றும் விலைமட்ட உறுதிப்பாடு.
   C. வெளிநாட்டு சொத்துக்களின் உறதிப்பாடு.
   D. நிதி முறைமையின் உறுதி பேணல்.
   E. உள்ளக, வெளியக உறுதிப்பாடு.

   1 .A யும் B யும்.    2. Aயும் Bயும் Cயும்.    3. Bயும் Cயும்
   4. A யும் Dயும்.    5. Bயும் Dயும்.

34. வணிக வங்கியொன்று பணவாக்கத்தை மேற்கொள்வது.
   1. அதனது முதலீடுகளை விற்பனை செய்வதன் மூலம்.
   2. அதனது ஒதுக்கத்தை உயர்த்துவதன் மூலம்.
   3. மிகை ஒதுக்கத்தை கடனாக வழங்குவதன் மூலம்.
   4. அதிகளவு காசோலைகளை அச்சிடுவதன் மூலம்.
   5. ஒதுக்கங்களை பிணைகளாக மாற்றுவதன் மூலம்.

35. வணிக வங்கிகளின் முதலாம்தர ஒதுக்கங்களில் உள்ளடங்குபவற்றை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
   1. திறைசேரி உண்டியல்கள், முதலீடு, கழிவிடப்பட்ட உண்டியல்கள்.
   2. முதலீடு, உள்நாட்டு வங்கிகளில் வசூலிக்க வேண்டிய காசு, கழிவிடப்பட்ட உண்டியல்கள்.
   3. மத்திய வங்கியிலுள்ள ஒதுக்கு, கையிலுள்ள காசு, திறைசேரி உண்டியல்கள்.
   4. கையிலுள்ள காசு, மத்திய வங்கியிலுள்ள ஒதுக்கு,வெளிநாட்டு வங்கிகளிலிருந்து அறவிட வேண்டிய காசு.
   5. மத்திய வங்கியிலுள்ள ஒதுக்கு, திறைசேரி உண்டியல்கள், கழிவிடப்பட்ட உண்டியல்கள்.

36. சந்தைத் தோல்வி உருவாகக் காரணமாக அமைவது தொடர்பில் சரியானது,
   1. நுகர்வோர் இறைமையும் தொழில் சுதந்திரமும் காணப்படல்.
   2. வள ஒதுக்கீடுகள் வினைத்திறன் வாய்ந்ததாக அமைவதுடன் வளர்பகிர்வு சமத்துவமாக அமைதல்.
   3. சந்தை வெளியீடுகளுக்குத் தேவைப்படும் வளங்கள் அருமையாக உள்ளமை.
   4. மிகையான அல்லது குறைவான வள ஒதுக்கீடுகள்.
   5. போட்டி நிலை காணப்படுதல்.

37. தீயபண்டம் தீங்கிழைக்கும் பண்டம் ஆகிய இரு பண்டங்களுக்கமிடையில் காணப்படும் ஒற்றுமை.
   1. இரு பண்டங்களும் நுகர்வில் பயனுறுதி வாய்ந்ததாகும்.
   2. இரு பண்டங்களும் நுகர்வில் பயனற்றவையாகும்.
   3. இரு பண்டங்களும் விலை செலுத்தப்படுபவையாகும்.
   4. இரு பண்டங்களும் வெளிவாரிச் செலவையுடயவை.
   5. இரு பண்டங்களும் சமூகத்திற்குத் தேவைப்படுவன.

38. தூய பொதுப் பொருள் ஒன்றுக்கான உதாரணம்.
    1. சுகாதார சேவை. 2. தேசிய நூதனசாலை. 3. தேசிய பாதுகாப்பு.
    4. புகையிரத போக்குவரத்துச் சேவை. 5. கல்வி.

39. வரித்தாக்கம் என்பது தொடர்பில் சரியான விடை யாது?
    1. வரியின் மூலம் அறவிடப்படும் வருமானத்தின் அளவு.
    2. வரிவிதிப்பால் பொருளாதாரத்தற்கு ஏற்படும் பாதக விளைவு.
    3. வரி எவர்மீது விதிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கின்றது.
    4. வரிச்சுமையை இறுதியில் யார் தாங்கிக் கொள்கின்றனர் என்பதைக் குறிக்கின்றது.
    5. வரி வருமானம் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பதைக் குறிக்கின்றது.

40. பின்வரும் கொள்கைகளில் எது விரிவாக்க இறைக்கொள்கையாகும்.
    1. வட்டிவீதத்தைக் குறைத்தலும் வரிகளை அதிகரித்தலும்.
    2. அரச செலவினத்தைக் குறைத்தலும் வரிகளை அதிகரித்தலும்.
    3. அரச செலவினத்தைக் குறைத்தலும் வரிகளை குறைத்தலும்.
    4. அரச செலவினத்தை அதிகரித்தலும் வட்டி வீதத்தைக் குறைத்தலும்.
    5. அரச செலவினத்தை அதிகரித்தலும் வரிகளை குறைத்தலும்.

41. சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்கு அவசியமாகக் கருதப்படுவது.
    1. அரசின் பொருட்கள் சேவைகள் மீதான செலவு.
    2. அரசின் குடித்தனத்துறை மீதான மாற்றல் கொடுப்பனவுகள்.
    3. அரச நிறுவனங்களுக்கான மாற்றல் கொடுப்பனவுகள்.
    4. பொதுக் கொடுப்பனவுக்கான வட்டிக் கொடுப்பனவு.
    5. அரசின் பாதுகாப்பு நோக்கிய செலவுகள்.

42. வெளித்தள்ளும் விளைவு பின்வருவனவற்றுள் எதன் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்.
    1. அரச செலவு. 2. தனியார் முதலீடு. 3. வட்டி வீதங்கள்.
    4. ஏற்றுமதிக் கேள்வி. 5. வரி வருமானங்கள்.

43. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை காரணமாக பணவீக்க விளைவுகளை ஏற்படுத்தும் நிதிப்படுத்தல் மூலாதாரத்தினை இனங்காண்க.
    1. தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து கடன் பெறல்.
    2. ஊழிய சேமலாப நிதியத்திடமிருந்து கடன் பெறல்.
    3. வணிக வங்கிகளினால் கொள்வனவு செய்யப்படும் திறைசேரி உண்டியல்களை வெளியிட்டுக் கடன் பெறல்.
    4. அரசாங்க உற்பத்தி நிறுவனங்களை தனியார் மயப்படுத்தலினால் கிடைக்கும் வருமானங்கள்.
    5. வெளிநாடுகளிடமிருந்து கொடைகளைப் பெறல்.

44. ஒப்பீட்டு நன்மை என்பதன் கருத்து.
    1. மற்றுமொரு நாட்டைவிட அதிகளவில் பொருளொன்றை உற்பத்தி செய்யும் ஆற்றல்.
    2. மற்றுமொரு நாட்டைவிட குறைந்த எல்லைச் செலவில் பொருளொன்றை உற்பத்தி செய்யும் ஆற்றல்.
    3. மற்றுமொரு நாட்டைவிட குறைந்த நீண்டகாலச் சராசரிச் செலவில் பொருளொன்றை உற்பத்தி செய்யும் ஆற்றல்.
    4. மற்றுமொரு நாட்டைவிட குறைந்த அமையச் செலவில் பொருளொன்றை உற்பத்தி செய்யும் ஆற்றல்.
    5. மற்றுமொரு நாட்டைவிட குறைந்த வளங்களைப் பயன்படுத்தி பொருளொன்றை உற்பத்தி செய்யும் ஆற்றல்.

45. சர்வதேச வர்த்தகத்தில் குவித்தல் எனும் பதம் குறிப்பது,
    1. குறைந்த தரம் கொண்ட பொருட்களை விருத்தியடைந்த நாடுகள் விருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு ஏற்றமதி செய்வதை.
    2. கழிவு அகற்றவதில் ஒப்பிட்டு நன்மையடைதலை.
    3. சராசரிச் செலவிலும் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்வதை.
    4. மிகை வெளியீட்டை அழிப்பதைக் குறிக்கும்.
    5. தரமான பொருட்களை இறக்குமதி செய்து தரமற்ற பொருட்களுடன் கலந்து ஏற்றுமதி செய்தல்.

46. சென்மதி நிலுவை அட்டவணையொன்றினது நடைமுறைக் கணக்குக்குரிய முதன்மை வருமானக் கணக்கில் உள்ளடக்கப்படும் மிக முக்கியமான விடயங்கள் யாவை?

அ. ஏற்றுமதி வருமானங்கள். ஆ. இலாபங்களும் பங்குலாபங்களும்.
இ. வெளிநாட்டு படுகடன் மீதான வட்டி. ஈ. உல்லாசப் பயணத்திலிருந்தான வருமானம்.
உ. புலம்பெயர்ந்து சென்றவர்கள் தம்மில் தங்கிவாழ்வோருக்கு அனுப்பும் பணம்.

1. அ, ஆ 2. ஆ, இ. 3. ஆ, ஈ 4. இ, ஈ 5. ஆ, இ, ஈ

47. பின்வருவனவற்றுள் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் இடம்பெறாதது எது?

1. அந்நிய செலாவணி ஒதுக்குகள்.
2. ஒரு பக்க செலுத்தல்கள்.
3. சேவைகளின் ஏற்றமதி.
4. முதலீடுகள் மீதான வருமான வரவுகள்.
5. முதலீடுகள் மீதான வருமான செலுத்தல்கள்.

48. மிதக்கும் நாணய மாற்றுவீத முறையொன்றில்,

1. அரசாங்கம் நாணய மாற்று வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் பொருட்டு தலையீடு செய்யும்.
2. வெளிநாட்டு நாணயத்தின் கேள்வி நிரம்பலை சமப்படுத்தும் பொருட்டு நாணயமாற்று வீதமானது சீராக்கமடைய வேண்டும்.
3. சென்மதி நிலுவையானது எப்பொழுதும் மிகை நிலையில் இருக்க வேண்டும்.
4. சென்மதி நிலுவை எப்பொழுதும் அரச பரதீட்டுக்குச் சமனாக இருத்தல் வேண்டும்.
5. நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியானது எப்போதும் அதிகரிக்க முற்படும்.

49. பின்வருவனவற்றுள் எதன் காரணமாக இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியின் தேய்வடைதல் சாத்தியமானது,

1. இலங்கை அரசாங்கம் கூடுதலான பணத்தை வெளிநாட்டிலிருந்து கடன் பெறுதல்.
2. சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிப்பதற்காக இலங்கை அரசாங்கம் கூடுதலான வெளிநாட்டு நன்கொடைகளை பெற்றுக்கொள்ளுதல்.
3. இலங்கையின் இறக்குமதிகள் தொடர்பான வரிகள் உயர்த்தப்படல்.
4. இலங்கை நிலையான நாணய மாற்று வீத முறைக்கு திரும்புதல்.
5. ஏனைய நாடுகளின் பணவீக்கத்தைக் காட்டிலும் இலங்கையின் பணவீக்க வீதம் உயர்தல்.

50. சர்வதேச வர்த்தகமானது ஒரு நாட்டினை,

1. அதன் உற்பத்தி சாத்திய எல்லைக்கு அப்பால் உற்பத்தி செய்யவும் நுகரவும் அனுமதிக்கின்றது.
2. அதன் உற்பத்தி சாத்திய எல்லையை வெளிப்புறமாக நகர்வதற்கு அனுமதிக்கின்றது.
3. அது உற்பத்தி செய்யும் அனைத்துப் பொருட்களினதும் ஒவ்வோர் அலகுக்குமான உற்பத்திச் செலவுகுளை குறைப்பதற்கு அனுமதிக்கின்றது.
4. அதன் நுகர்வுச் சாத்தியங்களை நிலையாகப் பேணிக்கொண்டு அதன் உற்பத்திச் சாத்தியங்களை விரிவாக்குவதற்கு அனுமதிக்கின்றது.
5. அதன் உற்பத்தி சாத்திய எல்லைக்கு அப்பால் நுகர்வதற்கு அனுமதிக்கின்றது

## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை- மார்ச் 2019

தரம் 13 (2019) பொருளியல்- 21-T-11 மூன்று மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள்**

❖ **உப பகுதி 'அ', உபபகுதி ' ஆ' ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் இரண்டுவினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

### உப பகுதி'அ'

**(இப்பகுதியிலிருந்து குறைந்தபட்சம் இரண்டுவினாக்களைத் தெரிவுசெய்க)**

1. (i) பொருளியலில் ஆராயப்படும் பிரதானவிடயமாக அருமைத் தன்மையும் தெரிவும் அமைகின்றது. அருமை என்பதால் விளங்குவது யாது? அது ஏன் தெரிவை உருவாக்குகின்றது. (4 புள்ளிகள்)

 (ii) வெவ்வேறான மாற்றுப் பொருளாதார முறைகளில் வள உரிமையின் பல்வேறு தன்மையை இனங்காண்க. (4 புள்ளிகள்)

 (iii) பொருளாதார அமைப்பொன்றின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்கின்றபோது பல நியதிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆவை யாவை. (4 புள்ளிகள்)

 (1v) பொருளாதாரம் ஒன்றில் உற்பத்தி இயலளவைத் திர்மானிக்கும் காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

 (v) பின்வருவனவற்றை உற்பத்திச்சாத்தியவளையியில் காட்டி விளக்குக.

 அ. பொருளாதார மந்தநிலையொன்றிலிருந்து பொருளாதாரம் மீட்சி பெறல்.

 ஆ. நுகர்வு உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட வளத்தில் ஒருபகுதி மூலதனப் பொருள் உற்பத்திக்கு மாற்றப்படல். (தலா 2 புள்ளிகள்)

2. (i) நிரம்பல் கோடு வலதுபுறம் நகர்வதற்கான காரணங்களைத் தருக? (4 புள்ளிகள்)

 (ii) குறிப்பிட்ட ஒரு பண்டம் விலைக்கேள்வி நெகிழ்ச்சியற்றிருப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை? (4 புள்ளிகள்)

 (iii) X என்ற பண்டத்தினை நுகர்வு செய்யும் நுகர்வோர்களான A, B என்ற இரு நபர்களது வருமானமும் அதிகரித்தபோது நபர் A X பண்டத்தின் நுகர்வுத் தொகையை அதிகரித்தார். அதேவேளைநபர் B X பண்டத்தின் நுகர்வுத் தொகையைக் குறைத்தார். மேற்குறித்த நிகழ்வு தொடர்பாக பண்டத்தின் தன்மைகளை விளக்குக. (4 புள்ளிகள்)

 (iv) போட்டிச் சந்தையொன்றில் குறிப்பிட்ட பண்டம் ஒன்று தொடர்பான அட்டவணை வருமாறு:-

| | | |
|---|---|---|
| விலை | 4 | 20 |
| கேள்வித் தொகை | 100 | 20 |
| நிரம்பல் தொகை | 0 | 80 |

 அ. மேற்படி அட்டவணைக்குரிய கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளைத் தருக. (2 புள்ளிகள்)


 ஆ. சமன்பாடுகளைப் பயன்படுத்தி சமநிலைவிலை ,சமநிலைத் தொகை என்பவற்றைக் காண்க. (2 புள்ளிகள்)

 இ. சமநிலையில் பொருளாதார மிகை யாது? (4 புள்ளிகள்)

3. i) பண்டமொன்றின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியும், விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியும் ஒன்றுக்கு குறைவாகக் காணப்படும்போது அரசு அலகுவரியினை விதிக்கின்றது. இந்நிகழ்வினை பொருத்தமான வரைபின் உதவியுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

 (ii) ஆகக்குறைந்த விலைக் கட்டுப்பாட்டினை விதிப்பதன் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தருக, (4 புள்ளிகள்)

 (iii) பின்வரும் வரைபைப் பயன்படுத்தி கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.




அ. ஆகக்கூடிய விலைக்குமுன் பொருளாதார மிகை. (2 புள்ளிகள்)

ஆ. ஆகக்கூடிய விலைக்குப்பின் பொருளாதார மிகை. (2 புள்ளிகள்)

இ. ஆகக்கூடிய விலைக்குப்பின் பொருளாதார மிகை இழப்பு. (2 புள்ளிகள்)

(iv) பண்டமொன்றின் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் உமக்குத் தரப்படுகின்றன.

$Qd = 800 - 20p$

$Qs = -200 + 20p$ இப் பண்டத்திற்கு அரசு 30 ரூபாவை உத்தரவாத விலையாக விதிக்கின்றது. இவ்விலையில் ஏற்படும் மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கின்றது.

அ. உத்தரவாத விலையால் ஏற்பட்ட மிகை நிரம்பல் யாது?

ஆ. மிகை உற்பத்தியை அரசு கொள்வனவு செய்வதால் அரசுக்கு ஏற்படும் செலவு யாது?

இ. முிகை உற்பத்தியை அரசு கொள்வனவு செய்தபின் நுகர்வோன் மிகை யாது?

(தலா 2 புள்ளிவீதம் மொத்தம் 6 புள்ளிகள்)

4. (i) நேர்ச் செலவு, நேரில் செலவு என்பவற்றை உதாரணங்களுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) நிறுவனம் ஒன்றின் வெளியீட்டு மட்டம் 1000 அலகுகள் ஆகும். ஓர் அலகின் விலை 40 ரூபாவாகும். இந் நிறுவனத்தின உரிமையாளர் 2000 ரூபா சம்பளம் பெறும் தொழிலை இழந்து இவ் உற்பத்தி முயற்சியை நடாத்துகின்றார். மேலும் நிலையான சொத்துக்களுக்கு 1000 ரூபா பெறுமானத் தேய்வு ஏற்படுகின்றது. மூலப்பொருட் செலவு 4000 ரூபாவும், சம்பளம் 2000 ரூபாவும், எரிபொருட் செலவு 1000 ரூபாவுமாகும். பெற்ற கடனுக்கான வட்டி 800 ரூபா செலவிடப்பட்டது.

அ. நேர் செலவு, நேரில் செலவு என்பவற்றின் அளவு யாது?

ஆ. கணக்கியல் இலாபம் யாது? (4 புள்ளிகள்)

(iii) நிலையான செலவில் அடங்கும் கூறுகள் எவை? (2 புள்ளிகள்)

(iv) சராசரி மொத்தச் செலவுக் கோட்டுக்கும் சராசரி நிலையான செலவுக் கோட்டுக்கும் இடையிலான செங்குத்துத் தூரம் ஏன் உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க குறைவடைந்து செல்கின்றது. விளக்குக. (4 புள்ளிகள்)

(v) அளவுத்திட்டச் சிக்கனம் ஏற்படுதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை? (2 புள்ளிகள்)

(vi) தனியுரிமைச் சந்தையில் நிறுவனமொன்று புதிதாக பிரவேசிப்பதில் தடை செய்யும் இயற்கை, மற்றும் செயற்கைத் தடைகளைத் தருக. (2 புள்ளிகள்)

(vi) சிலருரிமைச் சந்தையின் பண்புகள் எவை. (2புள்ளிகள்)

5. (i). பேரினப் பொருளாதாரக் கொள்கைகளைத் தருக. (2புள்ளிகள்)

(ii) தேசிய கணக்கீட்டில் உற்பத்தி எல்லையில் உள்ளடக்கப்பட வேண்டிய உற்பத்திச் செயற்பாடுகளைத் தருக. (2 புள்ளிகள்)

(iii) பின்வரும் தரவுகளைக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

(யாவும் மில்லியன் ரூபாக்களில்)

| | |
|---|---|
| வீட்டுத்துறை நுகர்வுச் செலவு | 500 |
| இலாப நோக்கமின்றி வீட்டுத் துறைக்கு வழங்கப்படும் சேவைகள். | 150 |
| அரசின் நுகர்வுச் செலவு. | 50 |
| மொத்த உள்நாட்டு மூலதனஆக்கம். | 500 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம். | 250 |
| பெறுமதியில் ஏற்படும் மாற்றம். | 100 |
| ஏற்றுமதி | 400 |
| இறக்குமதி | 250 |

அ. மொத்த உள்நாட்டுச் செலவு யாது?
ஆ. மொத்த உள்நாட்டு உற்பத்தி யாது?
இ. இருப்புக்களின் மாற்றம் யாது? (6 புள்ளிகள்)

(iv) பேரினப் பொருளாதார சமநிலை வேறுபடுவதற்கான காரணிகளைத் தருக. (2 புள்ளிகள்)

(v) பெருக்கியின் பல்வேறு வடிவங்களைத் தருக? (2 புள்ளிகள்)

(vi) பின்வரும் தரவுகளைக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.
(யாவும் மில்லியன் ரூபாக்களில்)
$C = 800 + 0.8yd$ $I = 400$ $G = 300$ $T = 200$
அ. மேற்படி பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமானம் யாது?
ஆ. இப் பொருளாதாரத்தின் சமநிலை வருமானத்தில் மாற்றம் ஏற்படாத வகையில் முதலீடுகளை 400 ஆல் அதிகரிக்க வேண்டுமாயின் எவ்வளவால் வரியினைக் குறைக்க அல்லது அதிகரிக்க வேண்டும்.
இ. ஏளிய பொருளாதாரமொன்றின் சமநிலையை வரைபில் காட்டுக. (6 புள்ளிகள்)

## உப பகுதி'ஆ'

**(இப்பகுதியிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க)**

6. (i) பணத்தின் தொழிற்பாடுகளைத் தருக. (4 புள்ளிகள்)

(ii) ஒன்று திரண்ட விரிந்த பணநிரம்பலின் கூறுகளைத் தருக. (2 புள்ளிகள்)

(iii) பணப் பெருக்கி என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(iv) பொருளாதாரம் ஒன்றின் பணநிரம்பல் 2500 மி.ரூபா. இதில் வணிக வங்கிகளில் 500 மி ரூபா கேள்விவைப்புக்களாகக் காணப்படுகின்றது. மிகுதி பொதுமக்களிடம் தாள், சில்லறை நாணயங்களாகக் காணப்படுகின்றது. சட்டமுறை ஒதுக்குத் தேவை 20% ஆகும். வணிகவங்கிகளில் மிகைஒதுக்கும் இல்லை.
அ. உயர்வலுப் பணத்தின் அளவு யாது? (2 புள்ளிகள்)
ஆ. பணப் பெருக்கியின் பெறுமதி யாது? (2 புள்ளிகள்)

(v) கேள்வித் தூண்டல் பணவீக்கம், நிரம்பல் தூண்டல் பணவீக்கம் என்பவற்றை விளக்கி அவை ஒவ்வொன்றுக்குமான இரண்டு காரணிகளைத் தருக. (4 புள்ளிகள்)

(v) பணநிரம்பல் என்பது ஒரு கையிருப்பு எண்ணக்கருவாகும்.ஆதனை விளக்கி அதன் உருப்படிகளைத் தருக. (4 புள்ளிகள்)

7. (i) .குறிப்பிட்ட நியதி ஒதுக்க வீதத்தில் வணிகவங்கிகளால் உருவாக்கக்கூடிய கடன் ஆக்கத்தைக் காட்டிலும் குறைவான கடனாக்கம் இடம் பெறுவதற்கான காரணங்களைத் தருக. (4 புள்ளிகள்)

(ii) குறித்த பொருளாதாரம் ஒன்றினது மொத்த பணநிரம்பல் 7500 பில்.ரூபாவாகும். வங்கித்துறை கட்டமைப்பிலுள்ள மொத்தக் கேள்விவைப்பு 5000 பில்.ரூபாவாகும். வங்கித் துறையின் ஐந்தொகை வருமாறு.

| பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|
| கேள்விவைப்பு | 5000 | காசுஒதுக்கம். | 500 |
| | | கடன்கள் | 4500 |
| | 5000 | | 5000 |

அ. பொதுமக்கள் கையிலுள்ள நாணயத்தின் அளவுயாது. (2 புள்ளிகள்)
ஆ. வங்கியில் மிகை ஒதுக்குகள் 250 பில்லியன்கள் காணப்படுகின்றதெனில் இம்மிகை ஒதுக்கு முழுவதையும் வங்கி கடனாக வழங்குகின்றதெனில் வங்கித்தறையால் உருவாக்கக்கூடிய உச்சக் கடன்களின் அளவு யாது? (4 புள்ளிகள்)
இ. கடன்கள் வழங்கிய பின்னர் வங்கி முறைமையின் ஐந்தொகையைத் தருக. (4 புள்ளிகள்)

(iii) நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மத்தியவங்கி செயற்படுத்தும் தொகை சார்ந்த பணக்கருவிகளை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) பணக்கொள்கை என்பதனை விளக்குக. (2 புள்ளிகள்)

8. (i) சந்தைத் தோல்வி ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகளைத் தருக. (4 புள்ளிகள்)

(ii) நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் என்பதனை இரண்டு உதாரணங்களுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) வுரி விதிப்பின் நியாயத்துவத்தை பேணுவதற்காக பின்பற்றவேண்டிய நியாயத்துவ தன்மைகளை வகைப்படுத்தி விளக்குக. (4புள்ளிகள்)

(iv) அரசாங்கவரவுசெலவுத் திட்டமொன்றில் நடைமுறைச் செலவு, மூலதனச் செலவு என்பவற்றை வேறுபடுத்தி அவற்றின் கூறுகளைப் பட்டியல்படுத்துக. (4 புள்ளிகள்)

(v) வரவுசெலவுத்திட்டமொன்றின் மொத்தப் பற்றாக்குறையின் அளவு அதிகரித்துச் செல்வதன் பிரதான விளைவுகள் எவை? (4 புள்ளிகள்)

9. (i) ஒப்பீட்டு நன்மையை தோற்றுவிக்கின்ற காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

(ii) பாதுகாப்புவாதத்திற்கு எதிரான மற்றும் ஆதரவான வாதங்களைத் தருக. (4 புள்ளிகள்)

(iii) X, Yஎனும் இரு நாடுகள் ஒரலகு உள்ளீட்டை பயன்படுத்தி கணணி,தேயிலை ஆகிய இரு பண்டங்களில் உற்பத்தி செய்யக்கூடிய அளவு வருமாறு:-

| நாடு | கணணி | தேயிலை |
|---|---|---|
| X | 20 | 200 |
| Y | 120 | 240 |

அ. எந்நாடு இரு பண்ட உற்பத்தியிலும் முழு நன்மையைக் கொண்டுள்ளது. (2 புள்ளிகள்)

ஆ. எந்தநாடு எப் பண்டத்தில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது. (4 புள்ளிகள்)

இ. இரு நாடுகளிலும் சர்வதேச வர்த்தகம் இடம்பெறவேண்டுமாயின் எந்தநாடு எந்தப் பண்டத்தை ஏற்றுமதி செய்யும்? (2 புள்ளிகள்)

ஈ. இரு நாடுகளிலும் 100 வளங்கள் இருப்பதாகவும் அவற்றை சமஅளவில் பயன்படுத்தி இரு பண்டங்களையும் ஆரம்பத்தில் உற்பத்தி செய்வதாகக் கருதுக. இந்நிலையில்,

1. வர்த்தகத்திற்கு முன்னர் இரு நாடுகளினதும் உற்பத்தி நுகர்வுமட்டத்தைக் கணிக்க.
2. வர்த்தகத்திற்கு பின்னர் இரு நாடுகளினதும் உற்பத்தி நுகர்வுமட்டத்தைக் கணிக்க.

(தலா 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 4 புள்ளிகள்.)

10. (i) வர்த்தகமாற்றுவிகிதம் என்பதனால் கருதப்படுவது யாது? நாடுகள் வர்த்தகமாற்று விகிதத்தை ஏன் கணிப்பிடவேண்டும். (4 புள்ளிகள்)

(ii). பெயரளவு நாணயமாற்றுவிகிதம மற்றும் மெய்நாணயமாற்றுவிகிதம் ஆகிய எண்ணக்கருக்களை வேறபடுத்துக. (4 புள்ளிகள்)

(iii) .இலங்கையின் சென்மதிநிலுவை அட்டவணையில் உள்ளடங்கும் பிரதானபகுதிகள் எவை? (4 புள்ளிகள்)

(iv) .நாணயப் பெறுமதி இறக்கமானது சென்மதிநிலுவைப் பிரச்சனையை தீர்ப்பதற்கு எவ்வாறு உதவுகின்றது. (4 புள்ளிகள்)

(v). வெளிநாட்டு உறுதிப்பாடு என்பதனால் கருதப்படுவது யாது? விளக்குக. (4 புள்ளிகள்)